மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்கான திட்டங்கள் போட்டு கார்ப்பரேஷன்மூலம் வடிகால் எல்லாம் தயார்செய்து விரைவில் நாற்றம் நீக்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கூவம் நதிக் கரை ஓரங்களில் பல அடுக்கு மாடிக் கட்டடங்கள் கட்டுவதுபற்றிச் சொல்லப்பட்டது. என்.ஜி.ஓ.-க்களுக்காக நந்தனத்தில் கட்டப்பட்ட பல மாடிக் கட்டடம் பழுதடைந்திருக்கிறதே, அதைப் பழுதுபார்க்க அரசாங்கம் ஏதாவது முயற்சியை மேற்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: எங்கெங்கு பழுது ஏற்பட்டாலும் அவற்றை உடனடியாகப் பழுது பார்ப்பதற்கு அரசாங்கம் அதற்கான அதிகாரிகளை எல்லாம் வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த வேலை நடந்துகொண்டுமிருக்கிறது.

குடிசைமாற்றுப் பணிகளுக்கு உலக வங்கி உதவி

*320. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடிசைமாற்று வாரியத்தின்மூலம் கட்டப்பட்ட வீடுகள் உள்ள பகுதிகளில் சாலை வசதி, குழாய் வசதி, விளக்கு வசதி போன்ற அடிப்படை வசதிகளுக்கென 1975–76 ஆம் ஆண்டில் உலக பாங்கு நிறுவனம் நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

Conference of Labour Ministers.

*321. *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Labour and Transport be pleased to state:

(a) whether the Central Government have invited the State Government during July 1975 to participate in the All India Labour Ministers' Conference to discuss ways and means to abolish the practice of bonded labour and redemption of debts attached to its victims; and

(b) If so, the details of the same?

1975 நவம்பர் 12]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம். 19—7—75 அன்று நடந்த மாநிலத் தொழிலாளர் நல மாநாட்டில் நான் கலந்து கொண்டேன்.

(இ) அடிமைத் தொழிலாளர் முறை இம்மாநிலத்தில் இருந்ததாகச் சொல்லப்படுவதை நான் மறுத்தேன். கீழ்க்கண்டவைகுறித்து ஒருமித்த கருத்து உள்ளது :—

1. அடிமைத் தொழிலாளர் முறையை ஒழிக்கச் சட்டம் ஒன்று இயற்ற வேண்டிய இன்றியமையாமை மைய அரசுக்கு ஏற்பட்டது.

2. இதனால் ஏற்படுகின்ற நிதிப் பொறுப்புகள், இதனைச் செயற்படுத்தத் தேவைப்படும் நிர்வாக அமைப்புகள் ஆகியவை பற்றி மாநில அரசுகள் ஆய்வுசெய்து, அடிமைத் தொழிலிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் கடன் கொடுப்பவர்களிடம் மீண்டும் சிக்கி அடிமைத் தொழில் செய்வதைத் தடுக்க மறுவாழ்வுத் திட்டங்களைத் தயாரிக்க வேண்டும்.

3. இப்பணியைக் கவனித்துக் கொள்ளவும், அவற்றை விரைவாகச் செயற்படுத்தவும் பொருத்தமான துறைகளையும் நிறுவனங்களையும் மாநில அரசுகள் குறிப்பிட வேண்டும்.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவரவர்களே, நகரசுத்தித் தொழிலாளர்கள் அதிகமான கடன்பட்டவர்களாக இருப்பதால், அவர்களின் கடனை ரத்து செய்யவேண்டுமென்று இந்த மாநாட்டில் பேசப்பட்டதா? இதுபற்றி அரசின் ஆலோசனை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட கருத்துக்கள் அங்கே பேசப்பட்டதாக எனக்கு நினைவில்லை. அங்கே அடிமைத் தொழிலாளர்களைப்பற்றிய பேச்சுக்கள்தான் வந்தன. பல்வேறு மாநிலங்களில் அப்படிப்பட்ட முறை இருப்பதை அந்த மாநிலத்திலிருக்கின்ற அமைச்சர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, நமது மாநிலத்தில் அடிமைத் தொழிலாளர் முறை இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையில் சொல்கிறார்கள்? ஏதாவது சாம்பிள் சர்வே எடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 நவம்பர் 12

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அடிமைத் தொழிலாளர்பற்றிய பிரச்னை வந்தவுடன், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களை அழைத்து எங்கேயாவது அப்படிப்பட்ட பிரச்னையிருக்கிறதா என்று அரசு ஆராய்ந்தது. அதன் பேரில் எடுக்கப்பட்ட முடிவுதான் அடிமைத் தொழிலாளர்கள் இல்லை என்பது.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இப்போது மத்திய சர்க்கார் சட்டம் நிறைவேற்றியிருக்கின்ற காரணத்தினாலே, அப்படி ஏதாவது அடிமைத் தொழிலாளர்கள் இருந்தால், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அடிமைத் தொழிலாளர்கள் எங்கேயிருக்கிறார்களென்று கண்டுபிடிக்கப்பட்டு காட்டப்பட்டாலும், அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயங்காது.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, பல நிலச் சுவான்தார்கள், அரிசன விவசாயத் தொழிலாளர்களை வருடத்திற்கு ஆயிரம் ரூபாய், இரண்டாயிரம் ரூபாய் என்று விலை பேசிக் கொண்டு, அவர்களை நிலையாக வைத்துக் கொள்ளும் ஏற்பாடு தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறதே, அது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அது அடிமை முறையில் கணக்கிடப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப் பட்ட முறைகள் எங்கேயாவது இருப்பதை உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால், நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாநிலம் பூராவிலும் இப்படிப்பட்ட விவரக் குறிப்பு எடுக்கப்பட்டது என்றும், அடிமைத் தொழிலாளர்கள் இல்லை என்றும் சொன்னார்கள். சேலம், கோவையில் இருப்பதாக மாவட்டக் கலெக்டர்கள் ஏற்கனவே அறிவிப்புத் தந்திருக்கிறார்கள். அதுகுறித்து அரசு ஆராயுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, கோவை மாவட்டத்தில் ஒரு பிரச்னை இப்படி எழுப்பப்பட்டு, அந்தமாதிரி விவகாரங்கள் இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டுமென்று

1975 நவம்பர் 12]

முடிவுசெய்து, மாவட்ட வாரியாகக் கேட்டு, பின்னால் மத்திய சர்க்காருக்கு இந்த அரசாங்கத்தின் சார்பில், நாங்கள் இவ்வாறு பரிசீலித்தோம், அப்படிப்பட்ட பாண்டெட் லேபர் இல்லை என்று தெரிய வருகிறது என்றுகூட எழுதி அனுப்பியிருக்கிறோம்.

தொழிலில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த அளவு வயது

* 322. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாக்டரி சட்டத்தின்கீழ் வேலை பெறுவதற்கான குறைந்தபட்ச வயதை 16 ஆக உயர்த்தக் கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு அண்மையில் கோரிக்கை ஏதேனும் விடுத்துள்ளதா ?

(இ) ஆமெனில், மத்திய அரசு அளித்த பதில் யாது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின்கீழ் வேலையில் அமர்த்தப்படுவதற்கான குறைந்த அளவு வயதை 14-லிருந்து 16-ஆக உயர்த்துவது விரும்பத்தக்கதல்ல என்று மத்திய அரசு மாநில அரசுக்குத் தெரிவித்துள்ளது. இதற்குக் காரணமாக இத்தகைய நடவடிக்கையால் பிற வேலைவாய்ப்புத் துறைகளிலும் பாதகமான விளைவுகள் ஏற்படக்கூடும் என்றும் மேலும், பெரும்பாலான மாநிலங்களிலும் மத்திய அரசின் நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் கல்லூரிப் புகுமுக வகுப்புவரை இலவசக் கல்வி வசதிகள் இல்லை என்பதையும் மத்திய அரசு சுட்டிக் காட்டியுள்ளது.

அரசு தொழிலாளர் காப்புறுதித் திட்ட மருத்துவ மனைகள்

* 323. வினா—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு தொழிலாளர் நலன்-போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரில் உள்ள E.S.I. மருத்துவ மனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.